# சிவகங்கை நகராட்சி

# அவசரக் கூட்டம்

நிகழும் பிலவ வருடம் 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் (12.10.2021) நாள் செவ்வாய் கிழமை புரட்டாசி மாதம் 26ம் நாள் காலை 11 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.பி.ராஜேஸ்வரன் பி.எஸ்சி.,**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.**

**சிவகங்கை நகராட்சி**

1. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 02.10.2021ம் தேதிய சுற்றறிக்கை கடித ந.க.எண்..21287/2021/EA2 வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மைத்திட்டம், குடிநீர் விநியோகம், பாதாளசாக்கடைத்திட்டம் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு பணியாளர்களை பணி அமர்த்துதல் தொடர்பாக அளவுகோல் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி சிவகங்கை நகராட்சியில் பொதுசுகாதாரம் மற்றும் பொறியியல் பிரிவிற்கு தேவைப்படும் பணியாளர்களின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | பணியின் விபரம் | அளவுகோல் படி தேவைப்படும் பணியாளர்கள் | ஓராண்டு செலவினம் (இலட்சத்தில்) | மூன்றாண்டு செலவினம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் | 84 | 167.80 | 503.04 |
| 2. | குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணிகள் | 26 | 71.20 | 213.60 |
| 3. | பாதாள சாக்கடைத்திட்டப் பணிகள் | 32 | 96.64 | 289.92 |
| 4. | தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் | 3 | 8.84 | 26.52 |
| | **மொத்தம்** | **145** | **344.48** | **1033.08** |

மேற்கண்ட அளவுகோலின் படி திடக்கழிவு மேலாண்மை திட்டம், குடிநீர் விநியோகம், பாதாளசாக்கடைத்திட்டம் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு பணியாளர்களை பணி அமர்த்திட ஓராண்டு செலவினம் ரூ.344.48 இலட்சம் என்ற நிலையில் மூன்றாண்டுகளுக்கு மதிப்பீட்டு செலவினம் ரூ.1033.08 இலட்சத்திற்கு உரிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி மேல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்..2343/2021/எச்1)

மன்றத் தீர்மானம் – எண். 637 – அனுமதிக்கலாம்.

# <u>சிவகங்கை நகராட்சி</u>

# <u>அவசரக் கூட்டம்</u>

நிகழும் பிலவ வருடம் 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் (27.10.2021) நாள் புதன் கிழமை ஐப்பசி மாதம் 10ம் நாள் காலை 11 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.பி.ராஜேஸ்வரன் பி.எஸ்சி.,**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.**

**சிவகங்கை நகராட்சி**

1. சிவகங்கை நகராட்சியில் 2021-22ம் நிதியாண்டு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பாதாளச்சாக்கடை உள் இணைப்பு வழங்குதல் மற்றும் குடிநீர் இணைப்பு வழங்குதல் பணிகள் மேற்கொண்டதால் சேதமடைந்த சாலைகளை செப்பனிட பணிகள் தேர்வி செய்து விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குர் சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து கீழ்காணும் பணிகள் தேர்வு செய்து விரிவான திட்ட அறிக்கை ரூ.225.00 இலட்சத்திற்கு தயார் செய்தது தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. பணிகளின் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | வார்டு எண் | யூனிகோடு | பணியின் பெயர் | நீளம் | | அகலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | BT | PB | | |
| 1 | 1 | 112001S015 | சி பி காலனி முதல் வீதியில் பேவர் தளம் அமைத்தல் | | 121.00 | 4.00 | 8.00 |
| 2 | 1 | 112001S016 | சி பி காலனி இரண்டாம் வீதியில் பேவர் தளம் அமைத்தல் | | 105.00 | 4.00 | 6.50 |
| 3 | 1 | 112001S017 | சி பி காலனி மூன்றாம் வீதியில் பேவர் தளம் அமைத்தல் | | 78.00 | 4.00 | 5.00 |
| 4 | 1 | 112001S018 | சி பி காலனி நான்காம் வீதியில் பேவர் தளம் அமைத்தல் | | 98.00 | 4.00 | 5.00 |
| 5 | 1 | 112001S013 | திருப்பத்தூர் ரோடு குறுக்கு வீதியில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | | 142.00 | 4.00 | 8.50 |
| 6 | 1 | 112001S012 | திருப்பத்தூர் ரோடு குறுக்கு வீதியில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | | 165.00 | 4.00 | 9.50 |
| 7 | 4 | 112004R078 | சொசைட்டி லே அவுட் மூன்றாம் வீதியில் தார் சாலை அமைத்தல் | 277.00 | | 6.50 | 16.00 |
| 8 | 4 | 112004R083 | கிருஷ்ணா லே அவுட் மெயின் பகுதியில் தார்சாலை அமைத்தல். | 98.00 | | 4.50 | 7.00 |
| 9 | 4 | 112004R075 | சொசைட்டி லே அவுட் முதல் குறுக்கு வீதியில் தார் சாலை அமைத்தல் | 109.00 | | 4.50 | 15.00 |
| 10 | 7 | 112004R130 | பவுண்ட் வீதியில் தார் சாலை அமைத்தல் | 300.00 | | 6.00 | 4.50 |
| 11 | 11 | 112004R173 | மஜித் ரோடு ஆறாம் வீதியில் தார் சாலை அமைத்தல் | 85.00 | | 5.60 | 6.00 |
| 12 | 12 | 112004R187 | தொண்டிரோடு ஆறாம் குறுக்கு வீதியில் தார்சாலை அமைத்தல் | 71.00 | | 6.00 | 3.50 |
| 13 | 12 | 112004R188 | தொண்டி ரோடு ஆறாம் குறுக்கு வீதியில் தார் சாலை அமைத்தல் | 36.00 | | 5.40 | 12.00 |
| 14 | 12 | 112004R181 | தொண்டிரோடு ஐந்தாம் குறுக்கு வீதியில் பேவர் தளம் அமைத்தல் | | | 4.00 | 24.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 15 | 18 | 112004R259 | வேலாயுதசாமி கோயில் வீதியில் தார் சாலை அமைத்தல். | 285.00 | | 6.50 | 24.00 |
| 16 | 19 | 112004R280 | மீனாட்சி நகர் விரிவாக்க பகுதியில் தார்சாலை அமைத்தல். | 286.00 | | 6.00 | 22.00 |
| 17 | 19 | 112004R281 | மீனாட்சி நகர் விரிவாக்க பகுதியில் தார் சாலை அமைத்தல். | 162.00 | | 5.60 | 11.00 |
| 18 | 19 | 112004R283 | மீனாட்சி நகர் விரிவாக்க பகுதியில் தார் சாலை அமைத்தல். | 90.00 | | 6.00 | 7.00 |
| 19 | 20 | 112004R310 | பாரதி நகர் நான்காம் குறுக்கு வீதியில் தார்சாலை அமைத்தல். | 80.00 | | 7.70 | 6.00 |
| 20 | 26 | 112004R366 | கல்லூரி சாலை மூன்றாம் குறுக்கு வீதியில் தார்சாலை அமைத்தல். | 79.00 | | 5.50 | 6.00 |
| 21 | 27 | 112004R411 | இளையாண்குடி ரோடு கிழக்கு 18ம் குறுக்கு வீதியில் தார்சாலை அமைத்தல். | 136.00 | | 5.00 | 9.50 |
| 22 | 27 | 112004R405 | இளையாண்குடி ரோடு கிழக்கு 11ம் குறுக்கு வீதியில் தார்சாலை அமைத்தல். | 83.00 | | 6.00 | 5.00 |
| 23 | 27 | 112004R380 | இளையாண்குடி ரோடு மேற்கு 4ம் குறுக்கு வீதியில் பேவர் தளம் அமைத்தல். | | 59.00 | 5.00 | 4.00 |
| 24 | 27 | 112004R381 | இளையாண்குடி ரோடு மேற்கு 4ம் குறுக்கு வீதியில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் | | 85.00 | 4.50 | 6.00 |
| 25 | 27 | 112004S167 | இளையாண்குடி ரோடு மேற்கு 9ம் குறுக்கு வீதியில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | | 125.00 | 3.50 | 6.50 |
| 26 | 27 | 112004R399 | இளையாண்குடி ரோடு மேற்கு 9ம் குறுக்கு வீதியில் பேவர் தளம் அமைத்தல். | | 75.00 | 4.00 | 5.50 |
| | | | மொத்தம் | **2177** | **1238** | | **225.00** |

**அலுவலகக்குறிப்பு:**

1. அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களுக்கு தார்சாலைகள் மற்றும் பேவர் சாலை பணிகள் மேற்கொள்ள ரூ.225.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு சமர்ப்பித்து நிர்வாக அனுமதி பெற மேல்நடவடிக்கை தொடரலாம்.

(ந.க.எண்..2360/2021/இ1

மன்றத் தீர்மானம் – எண். 638 – அனுமதிக்கலாம்.

# சிவகங்கை நகராட்சி

# சாதாரண கூட்டம்

நிகழும் பிலவ வருடம் 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் (29.10.2021) நாள் வெள்ளிக் கிழமை ஐப்பசி மாதம் 12ம் நாள் மாலை 04.00 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

## தலைமை திரு.பி.ராஜேஸ்வரன் பி.எஸ்சி,.

## ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.

## சிவகங்கை நகராட்சி

1. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2021க்குரிய பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இத்தேர்தல் பணிக்கு, ஆய்வுக்கூட்டங்கள், பயிற்சி வகுப்புகள், தேவையான கையேடுகள் மற்றும் படிவங்கள் ஆகியவற்றை நகராட்சி நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் சென்னை அலுவலக சுற்றறிக்கை எண்.U.7/2021. ந.க.எண்..2047/2019/ந.தே.1. நாள்..25.10.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட செலவினங்களுக்கு உத்தேச செலவினம் ரூ.3,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். )

மன்றத் தீர்மானம் – எண். 639 – அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சியில் 2011-12 முதல் 2013-14 வரை நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு பணி கிடைக்கப்பெற்றது முடிக்கப்பட்டுள்ளது. முடிவில் வரப்பெற்ற பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகைகள் ரூ.1,57,957/- ஐ ஒப்பந்ததாரர் திரு.M.கண்ணன் என்பவர் வழுங்கக்கோரியுள்ளார். மேற்படி வைப்புத் தொகையானது காலம் கடந்த வைப்புத் தொகையாக உள்ளதாலும் மேலும் ஒப்பந்ததாரர் தொகை வழங்க கோரியதாலும் மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | Providing of BT Surface & Water sink of Meenakshi Nagar | – | ரூ.17621/- |
| 2. | ஆலிஸ்மில்லர் உயர்நிலைப்பள்ளில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணி | – | ரூ.1,21,136/- |
| 3. | Providing Borewell with mini power pump, Rajendra prasath&Bose Road 4th Street. | – | ரூ.19200/- |
| | மொத்தம் | – | ரூ.157957/- |

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2030/2021/இ1)

மன்றத் தீர்மானம் – எண். 640 – அனுமதிக்கலாம்.

3. இந்நகராட்சியில் 2018-19ம் நிதியாண்டு முதல் 2019-20 வரை நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு பணி கிடைக்கப்பெற்று முடிக்கப்பட்டுள்ளது. வரப்பெற்ற பட்டியலில் பிடித்தம் செய்த வைப்புத் தொகைகள் ரூ.279693/- (இரண்டு இலட்சத்து எழுபத்து ஒன்பது ஆயிரத்து அறுநூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்)ஐ ஒப்பந்ததாரர் திரு.P.முருகன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | Construction of Special shelter Building (NULM) of Govt Hospital Premises | – | ரூ.2,02,957/- |
| 3. | நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பகிர்மான குழாய்கள் மற்றும் பம்பிங் குழாய்கள் அமைக்கும் பணி (2018-19, 2019-20) | – | ரூ.76736/- |
| | மொத்தம் | – | ரூ.2,79,693/- |

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1365/2021/இ1)

மன்றத் தீர்மானம் – எண். 641 – அனுமதிக்கலாம்.

4. இந்நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் ஜே.சி.பி வாகன எண் டி.எண்.63 ஏ.டி.சி 1606 வாகனத்தில் உள்ள சிறிய பழுதுகளை நீக்கும் பணிக்கு காரைக்குடி ஜெயராஜ் ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்தின் 23.10.2021ம் தேதிய விலைப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள ரூ.12,201/– (பன்னிரண்டாயிரத்து இருநூற்றி ஒன்பது) மட்டும் ஜெயராஜ் ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

காரைக்குடி ஜெயராஜ் ஆட்டோமொபைல்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி ரூ.12,201/–க்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம். மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வாங்கியதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.2740/2012/இ2)

மன்றத் தீர்மானம் – எண். 642 – அனுமதிக்கலாம்.

5. சிவகங்கை நகராட்சிக்கு சொந்தமான சிவன்கோவில் அருகில் அமைந்துள்ள உயர் கோபுர மின்கம்ப விளக்குகள் பழுதடைந்து விட்டது. அவற்றை கீழே இறக்க400 வாட்ஸ் MH பிட்டிங்களை கழற்றிவிட்டு புதிதாக 300 வாட்ஸ் LED விளக்குகள் மாட்டிக் கொடுக்க, விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஒமேகா சிஸ்டம், சிவகங்கை. | – | ரூ.2,09,899/– |
| 2 | கார்த்திகேயன் எலக்ட்ரிக்ஸ், மதுரை. | – | ரூ.2,35,536/– |
| 3 | கிளிக்ஸி ஏஜேன்ஸி, மதுரை. | – | ரூ.2,20,640/– |

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒமேகா சிஸ்டம், சிவகங்கை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒமேகா சிஸ்டம் சிவகங்கை நிறுவனத்தின் விலைப்புள்ளியை ரூ.2,09,899/–ஐ மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றத் தீர்மானம் – எண். 643 – அனுமதிக்கலாம்.

6. 21வது வார்டு மதுரை ரோடு முதல் குறுக்குத் தெருவில் உள்ள சிறுமின்விசை மோட்டார் பம்பிற்குரிய ஆழ்துளை கிணறு பழுதடைந்து விட்டது. இதனால் இப்பகுதியில் குடியிருக்கும் பொதுமக்கள் தண்ணீருக்காக மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே தண்ணீர் பிரச்சனை அவசியம் கருதி, அதன் அருகிலேயே புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மதிப்பீட்டித் தொகை ரூ.1.60 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவுத் தொகையை குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றத் தீர்மானம் – எண். 644 – அனுமதிக்கலாம்.

7. சிவகங்கை நகராட்சி வாரச்சந்தையில் அமைந்துள்ள 1 முதல் 15 கடைகள் நீண்ட நாட்களாக ஏலம் போகாததால் அவற்றிற்குரிய மின்கட்டணம் செலுத்தப்படாமல் இருந்தது. நடப்பு ஆண்டில் தான் 15 கடைகளும் ஏலம் விட்ப்பட்டது. அப்போது நிலுவையாக உள்ள மின்கட்டணம் ரூ.24,734/-க்கு நகராட்சி மூலம் மின்வாரியத்திற்கு செலுத்தப்பட்டது. அதன்பின் 5 கடைகளுக்குரிய மின் வயரிங்குகள் சேதமடைந்து இருந்ததை, புதிதாக வயரிங் செய்து மின்சார வாரியத்திற்கு முன்வைப்புத் தொகையும், விண்ணப்ப கட்டணமும் சேர்த்து ரூ.50,168/-க்கு, நகராட்சி குடிநீர் திட்ட கண்காணிப்பாளரால் தொகை செலுத்தப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கம் பதிவிற்கம் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
நகராட்சி கடைகளுக்கு மின்கட்டணம் மற்றும் வயரிங் வேலை செய்தல் ஆகியவற்றிற்கு மொத்த செலவு தொகை ரூ.74,902/-க்கு செலவு செய்யப்பட்டதற்கு, மன்றம் பதிவு செய்யலாம்.

மன்றத் தீர்மானம் – எண். 645 – அனுமதிக்கலாம்.

8. இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி மற்றும் வரியில்லா இனங்களின் வரித்தொகை செலுத்தக்கோரி பொதுமக்களுக்கு ஆட்டோ விளம்பரம் செய்ய வரிவசூல் பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு குறுகிய கால விலைப்புள்ளி அறிவிப்பு செய்யவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
வரி வசூல் பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

மன்றத் தீர்மானம் – எண். 646 – அனுமதிக்கலாம்.

9. இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி மற்றும் வரியில்லா இனங்களின் வரித்தொகை செலுத்தக்கோரி பொதுமக்களுக்கு ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய வரி வசூல் பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதில் 29.10.2021 அன்று கீழ்கண்ட நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | நாள் ஒன்றுக்கு ஆகும் செலவு |
|---|---|---|
| 1 | என்.சந்தானகிருஷ்ணன், நாகுமணி ஒளி &ஒலி பெருக்கி, 83-எ, மஜித்ரோடு, சிவகங்கை. | ரூ.3000/- |
| 2 | எஸ்.மணிகண்டன் ஜெனரேட்டர்ஸ், 84, மஜீத்ரோடு, சிவகங்கை. | ரூ.3050/- |
| 3 | கே.எஸ்.மணிஸ் ஜெனரேட்டர்ஸ், 184, தொண்டிரோடு, சிவகங்கை. | ரூ.3100/- |

மேற்கண்ட நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
வரி வசூல் பணியின் முக்கியத்துவத்தை கருத்தில்கொண்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த என்.சந்தானகிருஷ்ணன், நாகுமணி ஒளி &ஒலி பெருக்கி, 83-எ, மஜித்ரோடு, சிவகங்கை. அவர்களுக்கு விநியோக உத்தரவு வழங்க மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

மன்றத் தீர்மானம் – எண். 647 – அனுமதிக்கலாம்.

10. இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் குப்பை அள்ள பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண் மினி லாரி எண் டி.எண்.. TN 63 AC 4447 எண்ணுள்ள தகுதிச்சான்று பெறுவதற்கு வாகனங்களில் உள்ள பழுதுகளை நீக்க ஜனதா ராம் ஆட்டோ மொபைல்ஸ் மதுரை நிறுவனம் வழங்கி உத்தேச செலவின விலைப்புள்ளி ரூ.1,68,700/- (ஒரு இலட்சத்து அறுபத்து எட்டாயிரத்து எழுநூறு மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

ஜனதா ராம் ஆட்டோ மொபைல்ஸ் மதுரை நிறுவனம் வாகனம் தகுதிச்சான்று பெறுவதற்கு வழங்கிய உத்தேச விலைப்புள்ளி ரூ.1,68,700/-க்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்..2020/2021/இ2)
மன்றத் தீர்மானம் – எண். 648 – அனுமதிக்கலாம்.

11. இந்நகராட்சியில் பொறியில்பிரிவில் இயங்கி வரும் பொறியாளர் ஈப்பு வாகன எண் டி.எண்.63 L 6589 மற்றும் ஆணையாளர் ஈப்பு வாகனம் வாகன எண் டி.எண் 63 J 9787 ஆகிய இரு வாகனங்களுக்கம் 04.12.2021 முதல் 03.12.2022 வரை ஆயுள் காப்பீட்டுத் தொகை டி.எண்.63 L 6589 வாகனத்திற்க ரூ.12,841/-ம் டி.எண் 63 J 9787 வாகனத்திற்கு ரூ.14,080/-ம் ஆக மொத்தம் ரூ.26921/- (இருபத்தி ஆறாயிரத்தி தொள்ளாயிரத்து இருபத்தி ஒன்று) மட்டும் புனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி ( United India Insuranance Company Limited) சிவகங்கை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

பொறியாளர் ஈப்பு வாகனம் மற்றும் ஆணையாளர் ஈப்பு வாகனம் ஆகிய இரு வாகனங்களுக்கும் உரிய ஆயுள் காப்பீட்டுத் தொகை ரூ.26921/- (இருபத்தி ஆறாயிரத்தி தொள்ளாயிரத்து இருபத்து ஒன்று மட்டும்) வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்..2678/2008/இ2)
மன்றத் தீர்மானம் – எண். 649 – அனுமதிக்கலாம்.

12. இந்நகராட்சி ஆணையரது வாகன எண் டி.எண். 63J 9787 வாகனத்தில் உள்ள சிறு பழுதுகளை உள்ளூர் நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று பழுது நீக்கிய வகையில் காரைக்குடி ஸ்ரீ அம்மன் ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்திற்கு பில்பட்டியல் எண் 1816 நாள்..28.10.2021ன் படி தொகை ரூ.20668/- மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனத்திடம் ஈப்பு வாகனத்தை பழுது நீக்கிய வகையில் ஸ்ரீ அம்மன் ஆட்டோ மொபைல்ஸ் காரைக்குடி நிறுவனத்திற்கு தொகை ரூ.20,668/- வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம். ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்..2437/2021/இ2)
மன்றத் தீர்மானம் – எண். 650 – அனுமதிக்கலாம்.

**13**. சிவகங்கை நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையம் தெற்குப்பகுதி வணிக வளாகம் பராமரிப்பு பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/-த்திற்கு 08.02.2021 ம் தேதி தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு முதன் முறையாக 24.02.2021ம் தேதி அன்று ஓப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திருமதி.எம்.அம்சவள்ளி ஒப்பந்த்தாரர் சிவகங்கை | 0.12% மதிப்பீட்டு விலை விகித்த்தை விட குறைவு |
| 2 | திரு.பி.சுப்பிரமணியன் ஒப்பந்த்தாரர் தேவகோட்டை. | 1.41% மதிப்பீட்டு விலை விகித்த்தை விட அதிகம். |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்நதாரர் திருமதி.எம்.அம்சவள்ளி ஒப்பந்த்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்
2. மேற்படி பணியானது பொது மக்களின் நலன் கருதியும் பணியின் மற்றும் அத்தியாவசிய பணி என்பதால் விரைந்து முடிக்க வேண்டியுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெஙற்ற ஒப்பந்த்தாரர் திருமதி.எம்.அம்சவள்ளி ஒப்பந்த்தாரர் அவர்களுக்கு வேலை உத்தரவி வழங்கியதை மன்றம் அனுமதி வழங்கலாம்
   **(ந.க.எண் இ1/ 2021)**

மன்றத் தீர்மானம் – எண். 651 – அனுமதிக்கலாம்.

**14.** சிவகங்கை நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையம் தெற்குப்பகுதி வணிக வளாகம் பழுதடைந்துள்ளது மற்றும் மாடிப்படி மிகவும் சேதமடைந்து விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது எனசூவ பேருந்து நிலையம் தெற்குப்பகுதி வணிக வளாகத்தை பராமரிப்பு பணிக்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/– (ஐந்து இலட்சம்) ஆகும்.

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கான மதிப்பீட்டினை நகராட்சி வருவாய் நிதி 2020 – 21ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணியானது பொதுமக்களிக் நலன் கருதியும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

மன்றத் தீர்மானம் – எண். 652 – அனுமதிக்கலாம்.

**15.** சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 04 சொசைட்டி லே அவுட் மெயின், சொசைட்டி லே அவுட் குறுக்குத் தெரு கிருஷ்ணா லே அவுட் தெரு வார்டு எண் 11 அம்பேத்கர் தெரு வார்டு எண் 12 தொண்டி ரோடு குறுக்குத் தெரு வார்டு எண் 17 மோகன் குமாரமங்கலம் தெரு ஆகிய தெருக்களில் உள்ள பாதாள சாக்கடை ஆள் இறங்கும் குழிகளை சென்னை மாநகராட்சி Suction Cum jetting Recycling மெசின் என்ற வாகனம் மூலம் சுத்தப்படுத்துதல் பணி நடைபெற்று வருகின்றது. எனவே ஆள்இறங்கும் குழிகளை சாலை மட்டத்திற்கு உயரப்படுத்துதல் பணிக்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ10,00,000/– (பத்து இலட்சம்) ஆகும்

மேற்படி பணியானது திட்டப்பணி என்பதாலும் பொதுமக்களின் நலன் கருதியும் காலதாமதமின்றி செய்ய வேண்டியுள்ளதால் பணி மேற்கொள்ள தனி அலுவலரின் பார்வைக்கும் நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணியானது திட்டப்பணி என்பதாலும் பொதுமக்களின் நலன் கருதியும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

மன்றத் தீர்மானம் – எண். 653 – அனுமதிக்கலாம்.

**16**. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 04 சொசைட்டி லே அவுட் மெயின், சொசைட்டி லே அவுட் குறுக்குத் தெரு கிருஷ்ணா லே அவுட் தெரு வார்டு எண் 11 அம்பேத்கர் தெரு வார்டு எண் 12 தொண்டி ரோடு குறுக்குத் தெரு வார்டு எண் 17 மோகன் குமாரமங்கலம் தெரு ஆகிய தெருக்களில் உள்ள பாதாள சாக்கடை ஆள் இறங்கும் குழிகளை சென்னை மாநகராட்சி Suction Cum jetting Recycling மெசின் என்ற வாகனம் மூலம் சுத்தப்படுத்துதல் பணி நடைபெற்று வருகின்றது. எனவே ஆள்இறங்கும் குழிகளை சாலை மட்டத்திற்கு உயரப்படுத்துதல் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.10,00,000/– த்திற்கு 10,05,2021ம் தேதி தனி 26.05.2021ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **விலைப்புள்ளிதாரர் பெயர்** | **சதவீதம்** |
|---|---|---|
| 1 | திரு.பி.சுப்பிரமணியன் ஒப்பந்ததாரர் சிவகங்கை | 0.44% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2 | திருமதி.எம்அம்சவள்ளி ஒப்பந்ததாரர் சிவகங்கை | 0,05% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0,05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்த்தாரர் திருமதி.எம்.அம்சவள்ளி ஒப்பந்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி பணியானது திட்டப்பணி என்பதால் பொதுமக்களின் நலன் கருதியும் அத்தியவாசிய பணி என்பதால் விரைந்து முடிக்க வேண்டியுள்ளது என்வே பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்த்தாரர் திருமதி.எம்.அம்சவள்ளி ஒப்பந்த்தாரர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதி வழங்கலாம்

மன்றத் தீர்மானம் – எண். 654 – அனுமதிக்கலாம்.

**17**. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19ல் மீனாட்சி நகர் விரிவாக்கப் பகுதியாக 90 MM PVC பைப் லைன் பதிக்கும் பணிக்கு (மதிப்பீட்டு ரூ,5.00 இலட்சம்) 16.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **விலைப்புள்ளிதாரர் பெயர்** | **சதவீதம்** |
|---|---|---|
| 1 | திரு.பி.முருகன் ஒப்பந்ததாரர் சிவகங்கை | 3.31% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2 | திருமதி.எஸ்.இந்திராணி ஒப்பந்ததாரர் சிவகங்கை | 0.01% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகல் மதிப்பீட்டு விலை விகித்த்தை விட 0.01% குறைவாக வழங்கிய ஒப்பந்த்தாரர் திருமதி. எஸ்.இந்திராணி என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்த்தார்ருக்கு வேலை உத்தரவு வழங்கலாம்,

மன்றத் தீர்மானம் – எண். 655 – அனுமதிக்கலாம்.

**18.** 15வது மத்திய நிதி குழு பரிந்துறையின் பேரில் வினை மானிய திட்டம் 2020 – 2021 ன் கீழ் ரூ,10.00இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 4 சொசைட்டி லே அவுட் கிருஷ்ணா லே அவுட் இரயில்வே நிலையம் ரோடு மற்றும் காருண்யா நகரில் 90 MM PVC பைப் லைன் பதித்தல் பணிக்கு இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள் M.M கண்ஸ்ட்ரக்சன் இராமநாதபுரம், | 0.09% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2 | திரு.N மாரியப்பன் சிவகங்கை | 3.61% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகித்த்தை விட 0.09% குறைவாக வழங்கிய ஒப்பந்த்தார்ர் திருவாளர்கள் M.M கண்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்தரவு வழங்கலாம்

மன்றத் தீர்மானம் – எண். 656 – அனுமதிக்கலாம்.

**19.** சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 6 ராம் நகர் உள்ள விரிவாக்கப்பகுதிகளில் 90 MM PVC பைப் லைன் பதித்தல் பணிக்கு 16.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.N மாரியப்பன் சிவகங்கை | 0.99% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.பி.முருகன் ஒப்பந்ததாரர் சிவகங்கை | 2.27% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகித்த்தை விட 0.99% அதிகமாக வழங்கிய ஒப்பந்தார்ர் திரு N. மாரியப்பன் என்பவர் வழங்கய ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்தாரர்க்கு வேலை உத்தரவு வழங்கலாம்..

மன்றத் தீர்மானம் – எண். 657 – அனுமதிக்கலாம்.

**20.** இடைக்காட்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் 50HP மோட்டார் பேனல் போர்ட் மற்றும் கேபிள் சப்ளை செய்யும் பணிக்கு 16.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.M.கண்ணன் சிவகங்கை | 0.25% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2 | திருமதி.எம்அம்சவள்ளி ஒப்பந்ததாரர் சிவகங்கை | 1.07% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகித்த்தை விட 0.25% குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.M.கண்ணன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. பணி அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றத் தீர்மானம் – எண். 658 – அனுமதிக்கலாம்.

**21**. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15வது மானிய நிதிக்குழு 2020 – 21ஆம் திட்டத்தின் கீழ் குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 1 HP மற்றும் 5HP மோட்டார் சப்ளை செய்யும் பணிக்கு 16.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.பி.முருகன் ஒப்பந்ததாரர் சிவகங்கை | 0.03% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2 | திருமதி.எஸ்.இந்திராணி ஒப்பந்ததாரர் சிவகங்கை | 3.21% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகித்த்தை விட 0.03% குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரர் திரு. P.முருகன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2. மேற்படி பணியானது குடிநீர் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்தாரருக்கு வேலை உத்தரவு வழங்கலாம்.

மன்றத் தீர்மானம் – எண். 659 – அனுமதிக்கலாம்.

**22**. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிராக்டர் வாகன எண் டி.எண் TN63 B 6460 பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதால் உள்ளூர் நிறுவனத்தில் விலைப்புள்ளி பெற்ற பழுதகளை நீக்கிய வகையில் முத்து ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் தொண்டி ரோடு நிறுவனத்திற்க தொகை ரூ.52,300/– (ரூபாய் ஐம்பத்தி இரண்டாயிரத்து முந்நூறு) மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்ற பழுதுகளை நீக்கிய வகையில் தொகை ரூ.52,300/-(ஐம்பத்தி இரண்டாயிரத்தி முந்நூறு) மட்டும் முத்து ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் தொண்டி ரோடு நிறுவனத்திற்க தொகை வழங்கவும், ஆணையாளர் (பொ) மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வாகனத்தின் பழுதுகளை நீக்க பணி உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

**(ந.க.எண்..2485/2021/இ2)**

மன்றத் தீர்மானம் – எண். 660 – அனுமதிக்கலாம்.

**23**. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்..20027/2021/தி2 நாள்..08.09.2021ம் தேதியிட்ட கடிதத்தில், தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021-22ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது உள்ளாட்சி அமைப்புகளில் நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்கள் அமைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் அதற்கான விரிவான திட்ட அறிக்கையுடன் கூடிய கருத்துருவினை அனப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைப்பதற்க ரூ.200.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கையினை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி திட்டப்பணியினை தமிழ்நாடு அரசின் முழு மான்யமாக பெற்று செயல்படுத்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றத் தீர்மானம் – எண். 661 – அனுமதிக்கலாம்.

24. இந்நகராட்சிக்கு தேவையான கொரோனா கணக்கெடுப்புப் படிவம் 10000 எண்ணம் (100 பேடு) மற்றும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்ட விபர கணக்கெடுப்புப் படிவம் 5000 எண்ணம் (2 பக்கங்கள்) ஆகியவற்றை அச்சிட்டு வாங்கி கணக்கெடுப்பு நடத்தி தடுப்பூசி முகாம் பணிகளை எளிமைப் படுத்த ஏதுவாக இப்படிவங்களை சிவகாசி அனு பிரிண்டர் என்ற நிறுவனம் மூலம் அச்சிட்டு வாங்கி உபயோகித்த வகைக்கு (Transport Charges Including) ரூ.19750/-க்கும் (ரூபாய் பத்தொண்பதாயிரத்தி எழுநூற்றி ஐம்பது மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்..2011/2017/பி1)

மன்றத் தீர்மானம் – எண். 662 – அனுமதிக்கலாம்.

25. இந்நகராட்சி பகுதியில் செயல்பட்டு வந்த கீழ்கண்ட அரசு அலுவலகங்கள் 2019-20 முதல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியிலிருந்து அருகில் உள்ள காஞ்சிரங்கால் ஊராட்சிக்கு மாற்றப்பட்டுள்ளதால், கீழ்காணும் அரசு அலுவலகங்களில் பணியாற்றிய பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு வந்த தொழில் வரி கட்டணம் , தற்சமயம் ஊராட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்டு வருகிறது. எனவே கீழ்கண்ட வரி விதிப்புகளை இந்நகராட்சி கேட்பிலிருந்து ரூ.4,29,750/- நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| கேட்பு எண் | அலுவலகத்தின் பெயர் மற்றும் முகவரி | வருடம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 112/015/00069 | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், காஞ்சிரங்கால், சிவகங்கை | 2019-20 | 15,000 |
| | | 2020-21 | 30,000 |
| | | 2019-20 | 30,000 |
| | **மொத்தம்** | | **75,000** |
| 112/001/00002 | மகளிர் துரித நீதிமன்றம் | 2019-20 | 25,000 |
| | | 2020-21 | 25,000 |
| | | 2021-22 | 25,000 |
| | **மொத்தம்** | | **75,000** |
| 112/001/00009 | சிறப்பு நீதிமன்றம் SC/ST (POA) | 2019-20 | 30,750 |
| | | 2020-21 | 30,750 |
| | | 2021-22 | 30,750 |
| | **மொத்தம்** | | **92,250** |
| 112/001/00005 | குடும்ப நீதிமன்றம் | 2019-20 | 45,000 |
| | | 2020-21 | 45,000 |
| | | 2021-22 | 45,000 |
| | **மொத்தம்** | | **1,35,000** |
| 112/001/00006 | லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றம் | 2019-20 | 17,500 |
| | | 2020-21 | 17,500 |
| | | 2021-22 | 17,500 |
| | **மொத்தம்** | | **52,500** |
| | **ஆக மொத்தம்** | | **4,29,750** |

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் அரசு அலுவலகங்கள் நகரப் பகுதியில் இருந்து காஞ்சிரங்கால் ஊராட்சி பகுதிக்கு மாற்றம் செய்யப்பட்டு விட்டது. எனவே தொழில் வரி கேட்பினை நீக்கம் செய்யலாம்.
   (ந.க.எண்..2333/2021/அ1) நாள்..18.10.2021

**அலுவலகக்குறிப்பு:**

அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றத் தீர்மானம் – எண். 663 – அனுமதிக்கலாம்.

26 . இந்கராட்சி பொது சுகதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் மின் ஆக்கி மூலம் இயங்கும் 6 முதல் 10 வரை அன்றுள்ள வாகனத்தில் உள்ள பழுதுகளை செரிசெய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை ஆய்வுக்கூட்டத்திலும், மாவட்ட ஆட்சியரின் ஆய்வுக் கூட்டத்திலும் கேட்டுக்கொள்ளப்பட்டதன் பேரில் அவசர அவசியம் கருதி வாகனங்களை சரி செய்யும் பணிக்கு 0.9.09.2021 அன்று உள்ளூர் நிறுவனத்திடம் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட கீழ்காணும் இரு விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.இ.கா.டிரேடர்ஸ், காரைக்குடி. | – | ரூ.5,53,790/- |
| 2. | திரு.கார்த்திகேயன் அயன் ஒர்க்ஸ், மதுரை. | – | ரூ.5,63,650/- |

__அலுவலகக்குறிப்பு:__

மேற்கண்ட இரு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.இ.கா.டிரேடர்ஸ், காரைக்குடி. நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி ரூ.5,53,790/– (ஐந்து இலட்சத்தி ஐம்பத்தி மூவாயிரத்தி எழுநூற்றி தொண்ணூறு) மட்டும் மன்றம் ஏற்கலாம்.

மேற்படி பணி பொது சுகாதாரம் சம்மந்தப்பட்ட பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்..220/2021/இ2.. நாள்..09.09.2021)**

மன்றத் தீர்மானம் – எண். 664 – அனுமதிக்கலாம்.

27. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் மின் ஆக்கி மூலம் இயங்கும் 1 முதல் 5 வரை எண்ணுள்ள வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை ஆய்வுக்கூட்டத்திலும், மாவட்ட ஆட்சியரின் ஆய்வு கூட்டத்திலும் கேட்டுக்கொள்ளப்பட்டதன் பேரில் அவசர அவசியம் கருதி வாகனங்களை சரி செய்யும் பணிக்கு 09.09.2021 அன்று உள்ளூர் நிறுவனத்திடம் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரு விலைப்புள்ளிகளை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.இ.கா.டிரேடர்ஸ், காரைக்குடி. | – | ரூ.7,16,845/– |
| 2. | திரு.கார்த்திகேயன் அயன் ஒர்க்ஸ், மதுரை. | – | ரூ.7,27,545/– |

__அலுவலகக்குறிப்பு:__

மேற்கண்ட இரு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.இ.கா.டிரேடர்ஸ், காரைக்குடி. நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி ரூ.7,16,845/– (ஏழு இலட்சத்தி பதிறாயிரத்தி எண்ணூற்று நாற்பத்து ஐந்து) மட்டும் மன்றம் ஏற்கலாம்.

மேற்படி பணி பொது சுகாதாரம் சம்மந்தப்பட்ட பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்..220/2021/இ2.. நாள்..09.09.2021)**

மன்றத் தீர்மானம் – எண். 665 – அனுமதிக்கலாம்.

28. இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் (Covid–19) தொற்ற நோய் தடுப்பு பணியில் ஈடுபடும் களப்பணியாளர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் தொற்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் ஆகியோர்க்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக்கூடிய கபசுர குடிநீர் வழங்குவதற்கு தேவையான கபசுரகுடிநீர் பொடி 100 கிலோ அளவில், அரசு நிறுவனமான Tamcol, Chennai. நிறுவனத்திடம் இருந்து கொள்முதல் செய்யவும், அதற்குரிய செலவினத்தொகை ரூ.77,500/–க்கம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றத் தீர்மானம் – எண். 666 – அனுமதிக்கலாம்.

29. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்–19 நோய்தடுப்பு களப்பணிக்கு தேவையான கிருமி நாசினி பிளீச்சீங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு தூள், ஆசிட் மற்றும் பொது சுகாதார பணியான தூய்மை பணிக்கு தேவையான தளவாட சாமான்கள் கொள்முதல் செய்ய உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடம் இருந்து குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதில் 30.09.2021 அன்று கீழ்கண்ட நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பொருள் விபரம் | கொள்முதல் விலை ரூ. |
|---|---|---|---|
| 1 | Sri Aksaya & Co, 128/6, Pandian Nagar 5th Street. Madurai main Road, Kariyapatti, Virudhunagar Dist., | பிளீச்சிங் பவுடர் | 55.50/- |
| | | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | 16/- |
| | | ஆசிட் | 300/- |
| | | தெரு கூட்டுமாறு | 290/- |
| | | அரிவாள் | 700/- |
| | | கடப்பாரை | 850/- |
| | | மள் கம்பு போர்க் | 580/- |
| | | குப்பை அள்ளும் சட்டி | 490/- |
| | | மண் அள்ளும் பிரஸ் | 286/- |
| | | மண்வெட்டி (இரும்பு கைப்பிடி) | 500/- |
| | | குப்பை அள்ளும் கையேடு | 360/- |
| | | வாறுகால் கரண்டி | 490/- |
| | | தென்னைக் கைமாறு | 90/- |
| 2. | Shree Selva vinayagar Traders, No.13, S-Block, Ramanathapuram, T.Nagar, Chennai | பிளீச்சிங் பவுடர் | 56/- |
| | | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | 17/- |
| | | ஆசிட் | 310/- |
| | | தெரு கூட்டுமாறு | 300/- |
| | | அரிவாள் | 750/- |
| | | கடப்பாரை | 850/- |
| | | முள் கம்பு போர்க் | 580/- |
| | | குப்பை அள்ளும் சட்டி | 490/- |
| | | மண் அள்ளும் பிரஸ் | 246/- |
| | | மண்வெட்டி (இரும்பு கைப்பிடி) | 500/- |
| | | குப்பை அள்ளும் கையேடு | 370/- |
| | | வாறுகால் கரண்டி | 490/- |
| | | தென்னைக் கைமாறு | 100/- |
| 3. | A to Z Enterprises Plot.No.10, S2, Balaji Nagar 6th Street, Puzhudivakkam, Chennai-600 091 | பிளீச்சிங் பவுடர் | 54.50/- |
| | | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | 15/- |
| | | ஆசிட் | 285/- |
| | | தெரு கூட்டுமாறு | 285/- |
| | | அரிவாள் | 680/- |
| | | கடப்பாரை | 800/- |
| | | முள் கம்பு போர்க் | 575/- |
| | | குப்பை அள்ளும் சட்டி | 480/- |
| | | மண் அள்ளும் பிரஸ் | 240/- |
| | | மண்வெட்டி (இரும்பு கைப்பிடி) | 485/- |
| | | குப்பை அள்ளும் கையேடு | 340/- |
| | | வாறுகால் கரண்டி | 485/- |
| | | தென்னைக் கைமாறு | 80/- |

மேற்கண்ட நிறுவனங்களில் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் அளித்த A to Z Enterprises, Chennai. நிறுவனம் வழங்கிய விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியானது பொது சுகாதார பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மற்ம் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்க விநியோக உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

மன்றத் தீர்மானம் – எண். 667 – அனுமதிக்கலாம்.

30. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்–19 நோய் தடுப்பு களப்பணிக்கு தேவையான கிருமி நாசினிகள் மற்றும் பொது சுகாதார பணியான தூய்மை பணிக்கு தேவையான தளவாட சாமான்கள் குறைவாக உள்ளது. மழைக்காலம் தொடங்கி விட்டதால் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட அளவுகளில் கிருமி நாசினிகள் மற்றும் தளவாட சாமான்கள் கொள்முதல் செய்யவும், அதற்கு குறுகிய கால விலைப்புள்ளி அறிவிப்பு செய்யவும், கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.10,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | தேவையான பொருட்கள் | தேவையான அளவு |
|---|---|---|
| 1. | பிளீச்சிங் பவுடர் | 5000 கிலோ |
| 2. | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | 10000 கிலோ |
| 3. | ஆசிட் | 100 லிட்டர் |
| 4. | தெரு கூட்டுமாறு | 200 எண்ணம் |
| 5. | குப்பை அள்ளும் சட்டி | 100 எண்ணம் |
| 6. | மண்வெட்டி (இரும்பு கைபிடி) | 50 எண்ணம் |
| 7. | மண் அள்ளும் பிரஸ் | 50 எண்ணம் |
| 8. | தென்னை கைமாறு | 500 எண்ணம் |
| 9. | குப்பை அள்ளும் கையேடு | 100 எண்ணம் |
| 10. | வாறுகால் கரண்டி | 100 எண்ணம் |
| 11. | முள் கம்பு (போர்க்) | 100 எண்ணம் |
| 12. | அரிவாள் | 30 எண்ணம் |
| 13. | கடப்பாறை | 15 எண்ணம் |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்..1948/2021/எச்1)

மன்றத் தீர்மானம் – எண். 668 – அனுமதிக்கலாம்.

31. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் சிவகங்கை அவர்களின் 17.09.2021ம் தேதிய அறிவுரையின் படி 19.09.2021 அன்று 15 இடங்களில் நடைபெறவுள்ள மாபெரும் தடுப்பூசி முகாம்களின் விபரம் அடங்கிய துண்டு பிரசுரம் 10000 எண்ணம் கொள்முதல் செய்யவும், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களுக்கு குறுகிய கால விலைப்புள்ளி அறிவிப்பு செய்யவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.15,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

மன்றத் தீர்மானம் – எண். 669 – அனுமதிக்கலாம்.

32. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 19.19.2021 அன்று 15 இடங்களில் நடைபெறவுள்ள மாபெரும் தடுப்பூசி முகாம்களின் விபரம் அடங்கிய துண்டு பிரசுரம் கொள்முதல் செய்ய உள்ளூர் நிறுவனத்திடம் இருந்து குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதில் 17.09.2021 அன்று கீழ்கண்ட நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தேவையான பொருள் | கொள்முதல் விலை ரூ.(ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | மாயா ஸ்டுடியோ, சிவகங்கை | துண்டு பிரசுரம் | ரூ.1.60/– |
| 2. | Indian Entertainment, 17/8,Abdul Hammed street, Nehru Bazar, Sivagangai | துண்டு பிரசுரம் | ரூ.1.150/– |
| 3. | SK ஸ்டுடியோ வீடியோ அட்வர்டைஸ்மெண்ட், சிவகங்கை | துண்டு பிரசுரம் | ரூ.1.35/– |

மேற்கண்ட நிறுவனங்களில் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் அளித்த SK ஸ்டுடியோ வீடியோ அட்வர்டைஸ்மெண்ட், சிவகங்கை நிறுவனம் வழங்கிய விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியானது பொது சுகாதார பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்..1948/2021/எச்1)

மன்றத் தீர்மானம் – எண். 670 – அனுமதிக்கலாம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
சிவகங்கை நகராட்சி